# ஆனையிறவில் தொடர்ந்து குண்டு வீச்சு

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 225 பிரசோற்பத்தி ஆனி 27 (11 - 07 - 1991) வியாழன்

நேற்று இரண்டாவதுநாளாக ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளை நோக்கிப் பொம்மர் குண்டு வீச்சு விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடாத்த படையினர் ஒரு பகுதியூடாக வெளியேற முயன்ற வேளை விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் நேற்று நண்பகல் இடம்பெற்றது தொடர்ந்து விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதல்களைச்சமாளிக்க முடியாதபடையினர் இழப்புக்களுடன் பின்வாங்கி முகாமிற்குச் சென்று விட்டனர். எனினும் குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ந்து குண்டுகளைப் பொழிந்த வண்ணம் உள்ளன. இதேவேளை ஆனையிறவு இராணுவ முகாம் படையினர் குடிமனைகளை நோக்கிச் ஷெல்தாக்குதல்களையும், துப்பாக்கிப்பிரயோகங்களையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ப-11, 79)

# படைகள் நிதானம் இழந்துவிட்டன

# பிரிட்டிஷ் அமைச்சர் கண்டனம்

## இனப்பிரச்சினைகுறித்து இந்திய-பிரிட்டிஷ் பாராளுமன்றக் குழு கவலை!

**ஸ்ரீலங்கா இராணுவம் வன்முறைகளை அடக்குவதாகக் கூறிக் கொண்டு பயங்கரமான முறையில் நடந்துகொள்கிறது அரச படைகள் நிதானமிழந்து செயற்படுகின்றன.**

இவ்வாறு பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் லெனக் பிபி ஸிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்காவிற்கு பிரிட்டிஷ் தொழில் நுட்ப உதவியை நிறுத்தவில்லை எனினும் அங்கு நிலவும் மனித உரிமை மீறல்கள் குறித்தே பிரிட்டிஷ் அரசு கவலை கொண்டுள்ளது என அமைச்சர் லெனக்மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று லண்டனில் நடைபெற்ற இந்திய-பிரிட்டிஷ்பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் இலங்கையில் இனப்பிரச்சினை மோசமடைந்து வருவது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத் தொடரில் ராஜீவ் காந்தி மறைவு குறித்தும் இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

## ஆனையிறவு முகாமில் வாந்திபேதி நோய்!

நாட்டின் தென்பகுதியில் பரவிவரும் வாந்திபேதி நோய்க்கு ஆனையிறவு இராணுவ முகாம் சிப்பாய்கள் சிலரும் இலக்காகியுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

"அங்கொட தொற்று நோய் வைத்தியசாலைக்கு இச்சிப்பாய்கள் கொண்டு வரப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 50)

## இராணுவ அதிகாரி

## வேறு இலக்குகளையும் புலிகள் தாக்கலாம்

"ஆனையிறவு இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் தாக்குகின்றனர். இதைத்தடுக்க படையினர் முயற்சிக்கும் போது, அவர்கள் வேறு ஏதாவது இராணுவ இலக்குகளை தாக்கி நாசம் விளைவிப்பர்" இவ்வாறு இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன

எனினும் ஊரடங்குச் சட்டத்தைப் படையினர் அமுல்படுத்தியதற்கான காரணம் எதுவும் கூற அதிகாரிகள் மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இராணுவத் தாக்குதலால் பாடசாலை மாற்றம்

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து அடிக்கடி பரந்தன் பகுதியைநோக்கிச்ஷெல் தாக்குதல் நடாத்தப்படுவதால், பரந்தன் இந்து மகா வித்தியாலயம் தொடர்ந்து இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து இம்மாணவர்களுக்கு வேறு பாடசாலையில் வகுப்புக்கள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி இந்துமகாவித்தியாலயப்பகுதியில் அடிக்கடி இடம்பெற்ற விமானக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஜெயலலிதா சொல்கிறார்

## கடற்படையிடம் பாதுகாக்கவே மீனவர்களுக்குக் கட்டுப்பாடு!

தமிழக மீனவர்கள் கடலுக்குச் செல்வது குறித்து தமிழக அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகளினால் கரையோர மீனவக்குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக நேற்றுத் தமிழகச் சட்டசபையில் பிரச்சினை கிளப்பப்பட்டது.

இராமநாதபுரம், சிதம்பரனார் மாவட்டக் காங்கிரஸ் எம். எல். ஏக்கள் இதைசபையில் தெரிவித்தபோது "தமிழக மீனவர்கள் இலங்கை-இந்தியக் கடல் எல்லை தெரியாது அப்பால் சென்று இலங்கைக் கடற்படையினரிடம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கௌதாரிமுனையில் படகு கவிழ்ந்து இருவர் பலி

நேற்று மாலை கௌதாரி முனைக் கடலில் நடைபெற்ற படகுவிபத்தில் இருவர் பலியாகியுள்ளனர்.

மாலை மூன்று மணியளவில் இப்படகில் சுமார் பத்துப் பேர் சென்றதாகவும் படகு திடீரெனக் கவிழ்ந்தபோது இருவர் நீரில் மூழ்கி இறந்து விட்டதாகவும். தெரிவிக்கப்படுகிறது.

ஏனையவர்கள் அங்கு நின்ற மற்றைய படகுகள் மூலம் மீட்கப்பட்டனர். பலியான இருவரினதும் சடலங்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தாழ்வுபாட்டில் ஏழு பேர் சுற்றிவளைத்துக் கைது

மன்னார்த் தீவுப் படையினரின் ரோந்து தேடுதல் நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தாழ்வுபாடு - சனிவிலேஜ் என்ற பகுதி சுற்றிவளைக்கப்பட்டு ஏழு பொதுமக்கள் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டு முகாமில் வைத்துக் கடுமையாகத்தாக்கப்பட்டனர்.

முள்ளிவிம் ஊர்காவல் படையினர் முகமூடி அணிந்து இவர்களை அடையாளம் காண்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிறிஸ்ரி சோசை (42)

— 04 ஆம் பக்கம் பார்க்க

## திருமலைக் காடுகளில் மிதி வெடிகள் வெடித்தன

திருகோணமலை கும்புறுப்பிட்டி, குச்சவெளிக்காடுகளில் தேடுதல் நடாத்திய போது மிதி வெடிகள் வெடித்தன.

நிலாவெளி, கும்புறுப்பிட்டி வில் கும்விகாரை, 10ஆம் கட்டை முகாம்களின் படையினரே காடுகளில் தேடுதல் நடாத்தினர்.

தேடுதலின் போது குச்சவெளியிலும் கும்புறுப்பிட்டியிலும் 7 மிதிவெடிகள் வெடித்தன, படையினருக்கு ஏற்பட்டசேதம் தெரியவரவில்லை

## மன்னார் டாக்டரை இராணுவம் கொன்றது

மன்னார் எழுத்தூரைச் சேர்ந்த ஆங்கில வைத்தியரான ஜெயக்குமார் (35) என்பவர் கொழும்பிலிருந்து புத்தளம் வழியாக மன்னாருக்கு வந்து கொண்டிருந்தபோது கற்பிட்டி முனையில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இவரது சடலத்தைப் படையினர் உறவினரிடம் ஒப்படைக்கவில்லை எனவும் இவரைப்பற்றித் தமக்கு எதுவும் தெரியாது எனப் படையினர் கூறியதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். 79

## கொழும்பில் அவசர பாதுகாப்பு மாநாடு

கொழும்பில் தங்கியுள்ளவர்கள் தம்மைப் பொலிஸில் பதிவு செய்வதற்கான காலக்கெடு மேலும் இரு நாள்களுக்கு, 18 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப்பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கொழும்பு பாதுகாப்புத் தொடர்பாக நடாத்திய கூட்டம் ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கொழும்பில் உள்ள பிரமுகர்கள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவில் படையினர் பலி

ஆனையிறவில் நேற்றுநடைபெற்ற மோதலில் இராணுவத் தரப்பில் 9 பேர் பலியானதாகப் பாதுகாப்புஅமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஜேர்மனில் ஈழத்தமிழர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

ஜேர்மனில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழ் அகதிகளை நாடுகடத்த ஜேர்மன் அரசு எடுத்த முடிவைக் கண்டித்து அங்குள்ள ஈழத்தமிழர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

இலங்கையில் சிங்கள அரசு நடாத்தும் இனப்படுகொலை, தமிழ்மக்களின் இருப்பிடங்கள் மீது நடாத்தப்படும் விமானத்தாக்குதல்கள் மற்றும் பொருளாதார அழிவுகள் குறித்து இந்த ஆர்ப்பாட்ட

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

கடந்தமாதம் வவுனியா செட்டிகுளம் இராணுவ முகாமில் இருந்து பூவரசங் குளம் பகுதியை நோக்கி வந்த இராணுவத்தினருடன் ஏற்பட்ட

— 04 ஆம் பக்கம் பார்க்க

# செய்தி உலகம்

## மொழிபெயர்த்தவருக்கு கத்திக்குத்து

''சாத்தானின் வசனங்கள்'' என்ற சல்மான் ருஷ்டியின் நாவலை இத்தாலிய மொழியில் மொழிபெயர்த்த 61 வயதான ஏட்டோரிகபரியோலோ கத்தியால் குத்தப்பட்டார்.

தான் ஒரு ஈரானியர் எனக் கூறிய நபரே இத்தாக்குதலுக்குக் காரணம் ஆவார் — அவர் தப்பிச் சென்று விட்டார்.

43 வயதான இந்தியாவில் பிறந்த ருஷ்டி கொலை அச்சுறுத்தல் காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து இன்றுவரை தலைமறைவாக இருந்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## டயானா - சார்ள்ஸ் உறவில் விரிசல்

பிரிட்டிஸ் இளவரசி டயானா தனது 30வது பிறந்த தினத்தை தனது கணவர் இளவரசர் சார்ள்ஸ் இருக்குமிடத்துக்கு அப்பால் கழிக்க முடிவு செய்திருப்பது அவர்களின் 10 ஆண்டு திருமண பந்தத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளதையே காட்டுவதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

டயானாவைவிட 12 வயது மூத்தவரான சார்ள்ஸுக்கு 42 வயதாகிறது. தனது மனைவியின் பிறந்ததினத்திற்கு விருந்து ஒன்றை நடத்த சார்ள்ஸ் முன்வந்த போதிலும் இளவரசி தனக்கு அது தேவையில்லை எனக் கூறிவிட்டார். வருகிற 29ஆம் திகதி அவர்களது பத்தாவது திருமண ஆண்டுக் கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகளும் இருப்பதாகத் தெரியவில்லை.

## ஈராக்கியர் நாடுகடத்தப்பட்டனர்

குவைத் நேற்று முன்தினம் சுமார் 300 ஈராக்கியர்களை நாட்டைவிட்டு வெளியேற்றியுள்ளது. இவர்கள் 12 பஸ்களில் ஈராக்கின் எல்லைப் பகுதிக்கு கொண்டுபோய் விடுவிக்கப்பட்டனர்.

## • கடத்தப்பட்ட ரஷ்யர் கொலை

அஸாம் தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்ட சோவியத் பொறியியலாளர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த பொறியியலாளரும் மற்றும் 20 இந்திய அதிகாரிகளும் கடந்த ஜூன் 30, ஜூலை முதலாம் திகதிகளில் அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணியினரால் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர். இப் பொறியியலாளரை விடுவிக்க சிறையிலிருந்த 6 அஸாம் தீவிரவாதிகளை இந்திய அரசு நேற்று முன்தினம் விடுவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக்குழுவில் தெ. ஆபிரிக்கா

தென் ஆபிரிக்கா மீண்டும் ஒலிம்பிக்குழுவில் முழு உறுப்பினர் பதவிக்கு சேர்க்க பட்டுள்ளது. இன ஒதுக்கல் கொள்கைகளினால் தென்னாபிரிக்கா 1970 இல் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியில் இருந்து நீக்கப்பட்டிருந்தது. கடைசியாக 1960ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியிலேயே தென்னாபிரிக்கா இறுதியாகப் பங்கு பற்றியிருந்தது. இப்புதிய நடவடிக்கையினால் தென்னாபிரிக்கா மீண்டும் அடுத்தவருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றும் தகுதியைப்பெற்றுள்ளது.

★ மரண விசாரணையில் சாட்சியம்:

## விஷம் உட்கொள்வதைத் தடுக்க முயன்ற

# பொலிஸ் அதிகாரியின் கையைக் கடித்தார் வரதன்

எம்மைக் கண்ட வரதன் கையிலிருந்த ஏதோ ஒரு பொருளை வாயில் போட்டபின் நினைவிழந்து கீழே விழுந்தார். அவரது வாயில் இருந்த பொருளை எடுப்பதற்கு எம்முடன் வந்த பொலிஸ் அதிகாரி முயன்றபோது அது பலனளிக்கவில்லை. அவரது கையைக் கடித்து விட்டு வாயில் போட்ட பொருளை அவர் விழுங்கி விட்டார்.

இவ்வாறு கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்புத் தொடர்பாகத் தேடப்பட்டு, பின்னர் பொலிஸார் கைது செய்ய முயன்ற சமயம் தற்கொலை செய்து கொண்ட வரதன் (32) என்ற இளைஞரது மரண விசாரணையில் சாட்சியமளித்த குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஈ. எம். குணசிங்க தெரிவித்தார்.

இந்த மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டஏனைய சில தகவல்கள் வருமாறு:-

### பொலிஸாருக்கு இரகஸியத் தகவல்

தேடப்படும் வரதன் தலவாக்கொல்லை கொட்டக்கலையிலுள்ள பளிங்குமலைத் தோட்டத்தில் மறைந்திருப்பதாகக் கொழும்பிலுள்ள விசேட குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு இரகஸியத் தகவல் ஒன்று கிடைத்ததாம்.

### உயிரோடு பிடிக்க முயற்சி

அதனைத் தொடர்ந்து அத்தோட்டத்தைப் பொலிஸார் கண்காணிக்கத் தொடங்கினர். கொழும்பிலிருந்து விரைந்த பொலிஸார் தலவாக்கொல்லை பொலிஸ் நிலையத்தில் வைத்து வரதனை உயிரோடு கைது செய்யும் யுக்தி பற்றி ஆராய்ந்தனர்.

### பிரமுகர்கள் விசாரணை

இவரைப் பளிங்குமலை வீட்டில் ஒளிந்திருக்க உதவியவர்களெனச் சந்தேகிக்கப்பட்ட பிரமுகர்கள் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு அவர்கள் துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர்.

### பழகியவர்கள் அழைத்தனர்

அன்று இரவு 11.30 மணியளவில் மூவரை அழைத்துக் கொண்டு வரதன் மறைந்திருந்த வீட்டுக்குப் பொலிஸார் சென்றனர். அங்கு கூட்டிச் சென்றவர்கள் குரல் கொடுக்கச் செய்யப்பட்டனர். கதவைத் திற என அவர்களும் கூறினர். கதவு திறக்கப்பட்டதும் பொலிஸார் வரதனை உயிருடன் பிடிக்க முயன்றனர். ஆனால் அவர் நிலைமையைப் புரிந்து கொண்டு தான் வைத்திருந்த விஷப் புட்டியை வாயில் போட்டார்.

### விசாரணையில் பலர் சாட்சியம்

இவரின் மரண விசாரணையில் புலோலியைச் சேர்ந்தவரும், கொழும்பு சினி வீடியோவில் விற்பனைப் பெண்ணாகக் கடமை புரிபவருமான சுகந்தினி விஜயகுமார் 26), சினி வீடியோப் பங்குதாரரான நடராஜா சண்முகநாதன் (35 ஆகியோரும் மற்றும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள வேறு பலரும் சாட்சியமளித்தனர்.

### இடுப்பில் சிராய்ப்புக் காயம்

மரண விசாரணையில் சாட்சியமளித்த சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சிட்னி பிரமித்திரத்தின கண்ணாடித் துண்டுகளினாலும், கிறிஸடலின் துகள்களினாலும் ஏற்படுத்தப்பட்ட வெடிப்புக்காயங்கள் வாயோரங்களில் காணப்பட்டதாகவும், மரணம் உடனடியாகவே சம்பவித்திருக்கக் கூடுமெனவும், இடுப்பின்வலது பக்கத்தில் சிராய்ப்புக் காயம் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

### மாஸ்டர் அறிமுகப்படுத்தினார்

வரதன் தங்கியிருந்த வீட்டு உரிமையாளரான திருமதி மேரி ஜேக்கப் (43) சாட்சியமளிக்கையில் வரதனைப் பத்தனை பாடசாலை மாஸ்டர் இராமகிருஷ்ணன் தனக்கு அறிமுகப்படுத்தியதாகத் தெரிவித்தார்.

### சாரமும், பெனியனும் அணிந்திருந்தார்

வரதன் இறக்கும்போது சாரமும், பெனியனும் அணிந்திருந்தார். அடையாளம் காணப்படுவதற்காகச் சடலம் கொழும்பில் பெனியனுடனும், உள்ளங்கியுடனும் வைக்கப்பட்டிருந்தது.

சடலத்தை எவரும் உரிமை கோராத காரணத்தினால் அரச செலவில் தகனம் செய்யப் பொலிஸார் நீதிமன்ற அனுமதியைக் கோரினர். (38)

## அக்கரைப்பற்று இளைஞர்கள்

# கொழும்பில்பொலிஸாரால் கைது

கொழும்பில் தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் தொடர்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் கொழும்பில் தங்கியிருந்த அக்கரைப்பற்றைச் சேர்ந்த பதினொரு இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

# கோட்டைரயில் நிலையத்தில் யாழ் பயணிகளிடம் சூறை!

கோட்டை ரயில் நிலையத்தில் வடபகுதிப் பயணிகளின் பொருள்களை சிலர் திருடும் முயற்சியில் ஈடுபடுவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

ரயில் நிலையத்திற்கு முன்பாக வெளிச்சம் உள்ள பகுதிகளில் முன்பு ஓட்டோக்கள் நிறுத்தப்பட்டன. ஆனால் தற்போது இருளான பகுதிகளில் நிறுத்தப்பட்டு வருகின்றன.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிலர் பயணிகளின் பொதிகளைப் பறிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (38)

## மீண்டும் சென்றலில்

டொனால்ட் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கட் போட்டித் தொடரில், இவ்வார இறுதியில் நடைபெறவுள்ள போட்டிகள் மீண்டும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

13-ம்திகதி நடைபெறவுள்ள போட்டியில் பருத்தித்துறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிறாஸ்கொப்பேஸ் அணியும் 14-ம் திகதிகொக்குவில் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொணியன்ஸ் விளையாட்டுக்கழகஅணியும் மோதவுள்ளதாக சென்றலைற்ஸ் கழக கிரிக்கட் செயலாளர் விமலராஜன் தெரிவித்தார். (16)

# கடல் அரிப்பினால் வடக்கும் பாதிக்கப்படுகிறது

இலங்கையின் சில பகுதிகள் கடல் அரிப்பால் இழக்கப்பட்டு வருகிறது.

கற்பிட்டி முதல் யால தேசிய பூங்காவரையுள்ள 685 கிலோமீற்றர் நீளமுள்ள கடற்கரையில் வருடந்தோறும் 175,000 முதல் 285 000 சதுர மீற்றர் நிலம் கடலுக்கு இரையாவதாக மதிப்பீடு மூலம் தெரியவருகிறது.

இதே வேளை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், களுத்துறை, கொழும்பு, மாத்தறை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய கரையோரப் பகுதிகளும் இவ்வாறு பாதிக்கப்பட்டதாக அம்மதிப்பீடு மேலும் தெரிவிக்கிறது (38)

# கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமங்களில் தபால் விநியோகம்

சிங்கள கிராமிய பகுதிகளில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தபால்களைப் பட்டுவாடாச் செய்யும் புதிய திட்ட மொன்றை நடைமுறைப்படுத்த தற்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

கிராமப் புறங்களில் தபால் விநியோகம் சீராக நடைபெறாமையினாலேயே இப்புதியதிட்டத்தை நடைமுறைப் படுத்த ஆலோசிக்கப் பட்டுள்ளதாம். (38)

# 415 முகாம்களில் 10லட்சம் அகதிகள்;

## மாதாந்தம் 30 கோடி ரூபா செலவு

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புற்று அகதிகளாகத் தங்கியுள்ளோரின் நிவாரணத்துக்கென மாதாந்தம் 30 கோடி ரூபா செலவிடப்படுவதாக புனர்வாழ்வு அமைச்சின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

நாடுமுழுவதும் 415 அகதி முகாம்கள் இருக்கின்றன. இவற்றில் 181 யாழ் குடாநாட்டில் உள்ளன.

இந்த முகாம்களில் தங்கியுள்ள 10 லட்சம் பேருக்கான நிவாரணத்துக்கே மாதாந்தம் இந்தளவு தொகை செலவிடப்படுவதாகவும் அடுத்த குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜேர்மன் தொழில்நுட்பநிலையத்தில் புதிய பயிற்சி ஆரம்பம்

மொறட்டுவை ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரியில் ஓட்டோமொபைல் டெக்னீசியன், எலற்றோனிக் டெக்னீசியன், வெல்டிங் பயிற்சி, படவரைஞர் பயிற்சி போன்ற பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

16 வயதிற்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி ஆகஸ்ட் 4.

மாலைநேர, வார இறுதி வகுப்புகளுக்கே மேற்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன பயிற்சி நெறிகள் அக்டோபர் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பதிவாளர், ஜேர்மன் தொழில்நுட்பக்கல்லூரி 582, காலி வீதி, மவுன்ட் லெவினியாவிலுள்ள விலாசத்திற்கு 10ரூபாகாசுக்கட்டளை அனுப்பி விண்ணப்பப் படிவங்களைப் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (48)

## உடன் தேவை

2.50 - 17 அளவுடைய C 90 - ஹொண்டா மோட்டார் சைக்கிளுக்கான பின்ரயரும், ரியூப்பும் (யப்பான்) உடனடியாகத் தேவை. வைத்திருப்போர் தயவுசெய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்
முரசொலி,
கல்வியங்காடு.

A07053

## அசலா? நகலா?

### சீல் குத்தினால் உண்மைபுரியும்

ரூபா நோட் ஒன்றை உங்களுக்குத்தந்து அது அசலா? நகலா? என்று கேட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

நோட்டில் உள்ள கறுப்புக் கோட்டையும், நீர்ச்சின்னத்தையும் அவதானிப்பீர்கள். அப்படித்தானே?

போலி நோட்டுக்களைத் தயாரிப்பவர்கள் தற்போது அந்த அடையாளங்களையும் தங்கள் தயாரிப்புக்களில் இடும் தொழில்நுட்ப வசதியைப் பெற்று விட்டார்கள். இதனால் உங்களை அவர்கள் ஏமாற்றுவது தடுக்க முடியாது.

போலி நோட்டுத்தயாரிப்பாளர்களைமூக்கில்கைவைக்கச் செய்யும் புதிய தாள் தயாரிப்பு ஒன்று தற்பொழுது லண்டனில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விசேட 'செக்கியூரிட்டிப் பேப்பர்' தயாரிக்கப்படும் மரக் கூழில் சில இரசாயனக் கூட்டுக்களும் சேர்க்கப்படுகிறது. இந்த இரசாயனப் பொருளின் விவரம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாளில் தயாரிக்கப்பட்ட பண நோட்டில் உங்களுக்கு சந்தேகம் வந்தால் உடனே, அதற்கெனத் தயாரிக்கப்பட்ட ஒருவகை நிறமற்ற திரவகத்தைத் தோய்த்து நோட்டின் மீது முத்திரை குத்த வேண்டியது மட்டுமே உங்கள் வேலை

அந்த நோட்டு அசலாக இருந்தால் முத்திரை குற்றப்பட்டதும் அதிலுள்ள கூட்டு இரசாயனப் பொருள் இரசாயன மாற்றமடைந்து நோட்டில் ஒரு வர்ணம் தெரியும். போலி நோட்டாக இருந்தால் அங்கு இரசாயனக் கூட்டு இல்லாததினால் இரசாயன மாற்றம் நிகழாது. இதனால் முத்திரை குத்திய இடத்தில் நிற மாற்றம் நிகழாது.

தற்பொழுது இந்த விசேட செக்கியூரிட்டிப் பேப்பரைப் பயன்படுத்திப் பாஸ்போட், மற்றும் முக்கிய தஸ்தாவேஜுக்களையும் தயாரிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இனிக் கள்ள நோட்டுத் தயாரிப்பாளர்கள் வேறு தொழிலைத் தேடிக்கொள்ள வேண்டியதுதான்.

★ 'இந்து' பத்திரிகை விமர்சனம்

# உயிரைத் துச்சமாக மதித்து களத்தில் இறங்குவோர் புலிகளே!

தீவிர இலட்சியப் போக்கும் உயிரையே தியாகம் செய்யக்கூடியதான பற்றுறுதியும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மட்டுமே உண்டு என இந்தியாவின் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'இந்து' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

விடுதலை இயக்கங்கள் பற்றி இந்து பத்திரிகை சமீபத்தில் விமர்சனக் கட்டுரையொன்றினைப் பிரசுரித்திருந்தது. இந்தக் கட்டுரையிலேயே விடுதலைப் புலிகளைப் பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது

புலிகளின் தனிக்குணாம்சங்களாக இவை உள்ளதாகவும் 'இந்து' மேலும் எழுதியுள்ளது.

## மட்டு - வவுனியா பஸ்சேவை மீண்டும் தற்போது ஆரம்பம்

மட்டக்களப்பிலிருந்து வவுனியாவுக்கான இ.போ.ச. பஸ்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

இச்சேவை வார இறுதி நாள்களில் மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

சனி தோறும் காலை 7 மணிக்கு மட்டக்களப்பிலிருந்தும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு வவுனியாவிலிருந்தும் சேவைகள் நடாத்தப்படும்.

பிரயாணிகளின் தொகையைப்பொறுத்து ஏனையநாள்களிலும் பஸ்சேவையை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படுமென்று மட்டு. இ.போ.ச. முகாமையாளர் எஸ் சங்கரதாஸ் தெரிவித்தார்.

## விநாயகர் உற்சவம்

வடலியடைப்பு புதறாளை ஶ்ரீ சித்தி விநாயகர் ஆலய மணவாளக்கோல உற்சவம் இம்மாதம் 16ஆம் திகதி செவ்வாய் காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ப-11)

## மலையகப் பாடசாலைகளுக்கு தமிழகத்திலிருந்து ஆசிரியர்கள்

தமிழகத்தில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களைத் தருவித்து மலையகத்தின் தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்பற்றாக் குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ராஜாங்க அமைச்சர்களான எம். எஸ்.செல்லச்சாமி, பி.பி தேவராஜ் ஆகிய இருவரும் உறுதியளித்துள்ளனர்.

மலையகத் தமிழ்ப் பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இன்மையால் தமிழ் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது. ஏனைய பகுதிகளிலிருந்து மலையகத்துக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்களும் அரசியல் செல்வாக்கைப் பெற்றுப் பின்னர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிடுகின்றனர் என மலையகப் பிரமுகர்கள் ராஜாங்க அமைச்சர்களிடம் சுட்டிக்காட்டியதை அடுத்தே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. (38)

□ □

## உற்சவம்

நல்லூர் சட்டநாதர் வீதி ஶ்ரீ பாலகதிர்காமம் ஆலய வருடாந்த உற்சவம் 11 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 27 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை உற்சவம் நடைபெறும்.

## களியாட்டவிழாவில்குண்டுவீச்சு; ராணுவச்சிப்பாய்தேடப்படுகிறார்

மாத்தறை அக்மீமனை பொலிஸ் பகுதியிலுள்ள அம்பலங்கந்தை என்ற இடத்தில் இடம்பெற்ற களியாட்ட நிகழ்ச்சியின்போது கைக்குண்டு வீசியதாக இராணுவச் சிப்பாய் ஒருவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இச்சம்பவத்தில் இரண்டு சிறுவர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குண்டுவெடிப்பை அடுத்து ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## குரு பூசை

யாழ் இந்துக்கல்லூரி இந்து இளைஞர் கழகம் நடாத்தும் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை விழா 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அதிபர் அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

## பி. சி. சி. ஐ. வங்கியின் கொழும்புக்கிளைகளுக்கு சீல் வைப்பு

கொழும்பில் இயங்கி வந்த பிரபல்யமான வர்த்தக வங்கியொன்றின் நான்கு கிளைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மத்திய வங்கியினால் சீல் வைத்து மூடப்பட்டுள்ளன.

'பாங் ஒவ் கிரடிற் அன்ட் கொமேஷல் இன்ரனஷனல்' என்ற வங்கியின் கொழும்பு தலைமைக் காரியாலயத்திற்கும் அதன் மூன்று கிளைகளுக்குமே சீல்வைக்கப்பட்டுள்ளது.

## 1000 வைத்திய நிபுணர்கள் தேவை; உள்ளதோ 350 பேர் மட்டுமே!

நாட்டில் சேவை புரிய 1000 வைத்திய நிபுணர்கள் தேவைப்படுவதாக சுகாதார அமைச்சு எடுத்த கணிப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

ஆனால் தற்பொழுது இங்கு 350 வைத்திய நிபுணர்கள் மட்டுமே சேவையிலுள்ளதாகவும் அந்தக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வெளிநாடுகளிலிருந்து மேலும் ஒரு குறிப்பிட்ட தொகை வைத்திய நிபுணர்களை இங்கு வரவழைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

## தாங்கமுடியாத வெப்பம் ஏற்படும் என எச்சரிக்கை

முன்னெப்பொழுதும் இருந்திராத அளவுக்கு இப்போது உலகில் அதிகளவு வெப்பம் ஏற்படக்கூடிய நிலை காணப்படுவதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

வானிலை அமைப்பு முறை மாற்றம், வெள்ளம், மாசுபட்ட நிலத்தடி நீர்த்தேக்கம் போன்ற காரணங்களினாலும், காற்றுப் புறச் சூழலில் ஓஸோனின் அளவு பாதிக்கப்பட்டுள்ளதினாலுமே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜெயலலிதாவின் உதவியை நாடும் இலங்கை முஸ்லீம்கள்

இலங்கையின் வடக்குகிழக்கு முஸ்லீம்களின் எதிர்காலம் பற்றி தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுடன் பேச்சு நடாத்தப்படவுள்ளதாம்.

இப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவென முஸ்லீம் பிரமுகர்களைக் கொண்ட குழுவொன்று விரைவில் தமிழகம் செல்லவுள்ளதாம்.

## பெருமாளின் வீட்டுக்குள் புகமுயன்றவர் பம்பாய் வீதியில் சடலமாக!

வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாளின் வீட்டுக்குள் புகமுயன்றபோது கைது செய்யப்பட்டவர் பம்பாய்-அக்கிராய் பெருந்தெருவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வரதராஜப் பெருமாள் இந்தியாவில் மத்திய பிரதேஷில் சந்தேரிக் கோட்டைக்குள் இந்திய அரசின் பலத்த பாதுகாப்புடன் வசித்து வருகிறார்.

இவரின் வீட்டுக்குள் மூன்று மாதங்களுக்கு முன்னர் புகமுயன்ற ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரின் சடலம் கடந்த 26 ஆம் திகதி பம்பாய் வீதியில் மர்மமான முறையில் போடப்பட்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இறந்த தமிழ் ஊழியர்களின் ஒய்வூதியத்தில் மோசடி

1986, 89 ஆம் ஆண்டுகளில் இறந்துபோன இரு தமிழ் ஊழியர்களின் மாதாந்த ஓய்வூதியப்பணம் இவ்வாண்டுமே மாதம்வரை போலிக் கையொப்பமிட்டுப் பெறப்பட்டுவந்துள்ளது.

இறந்துபோன இருவருக்கும் வழங்கப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டு சுமார் ஒரு லட்சம் ரூபா வரை கையாடப்பட்டுள்ளது.

மாத்தளை மாநகர சபையின் சுகாதாரப் பிரிவில் கடமையாற்றிய இரு தமிழ்ப் பெண்களின் ஒய்வூதியமே இவ்வாறு கையாடப்பட்டுள்ளது.

மாத்தளை மாநகர சபையின் கணக்குப் பரிசோதனையின் போது இவ்விடயம் அம்பலத்திற்கு வந்தது (38)

## இன்பருட்டியில் பொதுக் கிணறு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கடற்றொழில் அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இன்பருட்டியில் நன்னீர்க் கிணறுஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்கிணறு அமைக்கப்பட்டதால் இப்பகுதியில் வாழும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களின் நீண்டகால குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது.

## ஊரடங்கு அமுல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்றுக்காலை 6 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை நேற்று முன்தினம் காலை 9 மணி முதல் மன்னார் மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

## 'எயிட்ஸ் குறள்கள்'

உலகையே ஒரு கலக்குக் கலக்குகிறது ஆட்கொல்லி 'எயிட்ஸ்' இந்த சந்தர்ப்பத்தில் பதினொரு 'எயிட்ஸ் குறள்களை' வெளியிட்டுள்ளது தமிழக சஞ்சிகையொன்று.

'எயிட்ஸ் இன்றி வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம் எமனோடு பின் செல்பவர்'

'எந்நோய் யார் யார் சொல் கேட்பினும்; அந்நோய் எயிட்ஸ் நோய் காண்பதறிவு'

'எந்நோய் வந்தார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை எயிட்ஸ் நோய் வந்தார்க்கு'

'அல்சர் கொடிது கான்சர் கொடிது என்பர் அவர் எயிட்ஸ் பற்றிக் கேளாதவர்' என்று தொடர்கிறது இந்த 'எயிட்ஸ்' மொழிகள்.

# விடுமுறையில் சென்றபோது மலையகத் தமிழர் கைது

கொழும்பில் பணிபுரியும் இரண்டு மலையகத் தமிழ் இளைஞர்கள் விடுமுறையில் தமது சொந்த இடத்துக்குச் சென்ற பொழுது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தீவிரவாத நடவடிக்கைகளுடன் இவர்களுக்குத் தொடர்பு உண்டெனக் காரணங்காட்டி கைது செய்யப்பட்டதாகவும் பின்னர் அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலமாக இந்த இளைஞர்கள் கொழும்பில் தொழில் புரிவதாகவும் இவர்களை விடுவிக்கத்தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33

# காங்கிரஸ் வேட்பாளரே சபாநாயகராகத் தெரிவு

இந்தியாவின் 10ஆவது பாராளுமன்றத்தின் சபாநாயகராகக் காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த சிவராஜ பட்டீல் (55) தெரிவானார். குரல்வாக்கெடுப்பு மூலம் ஒருமனதாக இவர் தெரிவாகினார்.

முன்னதாக பாரதிய ஜனதாவைச்சேர்ந்த ஜஸ்வன் சிங்கும், தேசிய முன்னணியைச்சேர்ந்த ரபிராயும் போட்டியிட்ட போதிலும் பின்னர் அவர்கள் தாமாகவே போட்டியிலிருந்து விலகிக் கொண்டனர்.

# 108 கிராமசேவகர் பதவிகள் காலியாக உள்ளன

யாழ் மாவட்டத்திற்கு நூற்றி எட்டுக்கிராமசேவையாளர் பதவிகள் வெற்றிடங்களாக இருப்பதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வட கிழக்கு மாகாண சபையின் அனுமதி கிடைத்ததும் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் எனவும் தெரிவிக்க படுகிறது.

இதற்கான விண்ணப்பங்கள் உள்ளூர்ப் பத்திரிகைகள் மூலமாக கோரப்படும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. 74

## தாழ்வுபாட்டில்...

தாழ்வுபாடு, நேசம் குருஸ் (55) வங்காலை உட்பட ஏழுபேரே இவ்வாறு கொண்டு செல்லப்பட்டு பின்னர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களாவர். (79)

## வீரமரணம்...

மோதலில் படுகாயம்அடைந்து சிகிச்சை பெற்று வந்த வீரவேங்கை ரஜனி (மகாலிங்கம் நாராயணன் மட்டக்களப்பு) நேற்றுவீரமரணத்தை தழுவிக் கொண்டார்.

## கௌதாரி...

கள் இதுவரை மீட்கப்படவில்லை

பலியானவர்களில் ஒருவர் கணேசு (அளவெட்டி) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## ஜேர்மனில்...

ஊர்வலத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

தம்மைத் திருப்பியனுப்பினால் தாம் சித்திரவதைக்குள்ளாகிச்சிறைகளில் அடைக்கப்படுவோம் என்றும் அவர்கள் கோஷங்கள் எழுப்பினர்.

இதேவேளை அந்நாட்டு அரசு இருபத்தையாயிரம் பேரை முதற்கட்டமாக அனுப்பத்தீர்மானித்துள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது (ப-11)

## இராணுவ...

குண்டு வீச்சினால் அதன் மாணவர்களும் பாடசாலைக்குச் செல்ல அச்சம் தெரிவிக்கின்றனர். ப6

## கடற்படையிடம்...

அகப்படாது தடுக்கவே புதிய கட்டுப்பாடு'' கொண்டுவரப்பட்டதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பதிலளித்தாராம்.

## கொழும்பில்...

பொது மக்கள் பிரதிநிதிகள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

A/L 92

தாவரவியல்

திரு. பொ. ஐங்கரநேசன்
புதிய பிரிவுகள்
(சனி, ஞாயிறு, வகுப்புக்கள்)

ஆரம்பம்:- 14 . 07 . 91 (ஞாயிறு)

காலை 6 - 7:- தாவர உடற்றொழிலியல்
காலை 7 - 8: தாவர இராச்சியத்தின் பிரிவினைகள்
(பதிய உடலமைப்பும் இனப்பெருக்கமும்)
பிற்பகல் 2 - 3:- தாவர உடலமைப்பியல்

யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

07030

# பிரயாண அனுமதிப்பத்திரம் விண்ணப்பிப்போர் கவனத்துக்கு

வடபகுதிக்கு வெளியே செல்வோர் அனுமதிப் பத்திரம் பெறுவது குறித்து விடுதலைப் புலிகள் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு விடுத்த அறிவுறுத்தல் வருமாறு:

குறிப்பிட்ட கடைகளில் விற்பனையாகும் விண்ணப்பப் படிவத்தை நூறு ரூபா பணம் செலுத்திப் பெற்று விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அவரவர் சொந்த இடங்களில் உள்ள கிராம சேவையாளர் பிரிவில் மாத்திரம் ஒப்படைத்து ஏழு நாட்களின் பின்னர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

விதிவிலக்குகள்: வெளிமாவட்டத்தைச் சேர்ந்த கல்வி பயிலும் மாணவர்களாயின் அவர்கள் மறுமலர்ச்சிக் கழகத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட சிபார்சுக் கடிதத்தைக் கொடுத்தும், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனின் அவர்களின் தொடர்பகங்களிலும், ஏனையோர் அவசர அனுமதி வழங்கும் காரியாலயங்களிலும் இலவச விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து அக் காரியாலயங்களிலேயே அவர்களுக்குரிய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என உறுதிப்படுத்தின் அவர்களின் தொடர்பகங்களில் 15 ரூபா டணம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து அக் காரியாலயங்களிலேயே அவர்களுக்குரிய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

அரச கூட்டுத்தாபனங்களில் வேலை புரிவோர் வேலையின் நிமித்தம் வெளியே செல்வதாயின் அதனை உறுதிப்படுத்தும் விதத்தில் மேலதிகாரியின் உறுதிப்படுத்தப்பட்ட சிபார்சுக் கடிதத்தை அவசர அனுமதி வழங்கும் காரியாலயத்தில் ஒப்படைத்து 15 ரூபா பணம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை மாத்திரம் பெற்றுக் கொள்ளலாம்

குறிப்பு: அனுமதி மறுக்கப்படின் எம்மால் வழங்கப்படும் அனுமதி மறுப்பு அட்டையை அவர்கள் விண்ணப்படிவம் வாங்கிய கடைகளில் கொடுத்து முன்பு படிவத்திற்கென செலுத்திய பணத்தில் அரைவாசிப்(50 ரூபா) பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

அவசர அனுமதி: குறிப்பிட்ட கடைகளில் விற்பனையாகும் விண்ணப்பப் படிவத்தை 100 ரூபா பணம் செலுத்திப் பெற்று அதனைப் பூர்த்தி செய்தல் வேண்டும். (விண்ணப்பத்தில் மீட்பு நிதி செலுத்தியிருப்பின் பற்றுச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்டிருத்தலுடன்அவசியம்பற்சீட்டு அனுமதி வழங்குபவருக்கு காட்டப்படல் வேண்டும். மண் மீட்பு நிதி செலுத்தாவிடின் மாத்திரம் சிற்றூரவையிடம் சிபார்சுக் கையொப்பம் பெற்றிருத்தல் வேண்டும். கிராமசேவையாளரின் சிபார்சு இதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.)

பின் நம்பிக்கையான ஆட்பிணையுடன் 100 ரூபா பணமாகச் செலுத்தி விண்ணப்பித்து உடனேயே அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஆட்பிணை நிற்பவர் கட்டாயமாக அவசர அனுமதி வழங்கும் காரியாலயத்திற்குச் சமூகம் தர வேண்டும்.

முன்னுரிமை: விசேட பரீட்சைகள், மரணச் சடங்குகளில் நேரில் சமுகமளிக்க, சுகவீன முற்றோரைக் கொண்டு செல்லல் போன்ற அத்தியாவசியத் தேவைகளை உறுதிப்படுத்துவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். (நாள் ஒன்றுக்கு 50 ற்கு மேற்படாத அவசர அனுமதிகளே ஒரு காரியாலயத்தில் வழங்கப்படும்.)

பொதுவான குறிப்புகள்: ஒரு விண்ணப்பப் பத்திரத்தில் ஒரு குடும்பத்தில் ஐந்து பேருக்கு மேற்படாமல் மாத்திரமே விண்ணப்பிக்கலாம். ஒரு குடும்பத்தைத் தவிர்ந்த ஏனைய உறவினர்களின் பெயரையோ அல்லது மணமான விண்ணப்பதாரரின் பிள்ளைகளின் பெயரையோ ஒரே குடும்பமாக விண்ணப்பதாரர் ஒரே படிவத்தில் விண்ணப்பிக்க இயலாது.

தேசியஅடையாள அட்டை, கடவுச் சீட்டு என்பன இல்லாதோர் கண்டிப்பாக 2×2½ அங்குல படங்கள் இரண்டை கிராமசேவகரிடம் கொடுத்து உறுதிப்படுத்தி அவற்றில் ஒன்றை தம்முடன் வைத்தே பிரயாணம் செய்ய வேண்டும். 15 வயதிற்கு மேற்பட்டோர் இவை மூன்றில் ஏதாவது ஒன்று இல்லாமல் தடை முகாமைத் தாண்டிச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மண் மீட்பு நிதி செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டின் போட்டோ பிரதி விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட்டிருப்பின் மாத்திரமே சிற்றூரவையின் சிபார்சு எதிர்பார்க்கப்படமாட்டாது ஏனையோர் கட்டாயம் சிற்றூரவையின் சிபார்சு பெற்றிருத்தல் வேண்டும்.

15 ரூபாவிற்கு விண்ணப்பப் படிவத்தை பெறுபவர்களும், அவசர அனுமதி பெற வேண்டுமாயின் 100 ரூபா பணம் செலுத்தி ஆட்பிணையுடனேயே அனுமதி பெற வேண்டும்

கிராம சேவையாளர் காரியாலயங்களில் விண்ணப்பித்தவர்கள் தமது அனுமதியையும் கிராம சேவையாளர் காரியாலயத்தில் பெறவேண்டும். அவசர அனுமதி வழங்கும் காரியாலயத்தில் வழங்கப்படமாட்டாது

(விதி விலக்கு: வவுனியா, தீவுப்பகுதி காரியாலயங்கள்)

அவசர அனுமதி கோருவோர் எக் காரணம் கொண்டும் அதை நிரந்தர அனுமதியாகப் பெற முடியாது. நிரந்தர அனுமதிக்கு விண்ணப்பித்தோர் அனுமதி கிடைக்கு முன் அவசரமாகச் செல்ல வேண்டியிருப்பின் பிரத்தியேகமான ஓர் விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து அவசர அனுமதிக்குரிய விதிமுறைகளின்படி விண்ணப்பித்து தற்காலிக அவசர அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

கடைகளில் படிவங்களை விற்கும் கடை உரிமையாளர்கள் எக் காரணம் கொண்டும் 15/ ரூபாவிற்கோ அல்லது இலவசமாகவோ விண்ணப்பப்படிவங்களை விற்க இயலாது.

தமிழீழ இணக்கமன்றில் வழக்கு உள்ளவர்கள், எம்மால் வெளியே செல்லவேண்டாம் என நிபந்தனை இடப்பட்டவர்கள் போன்றோர் விண்ணப்பிக்க இயலாது.

வவுனியா தொழில் புரிவோர், வியாபாரத்தில் நோக்கம் எமது தடைமுகாமைத் தாண்டிச் செல்வோர்லொறிச் சாரதி, கிளினர் போன்றோர் நிரந்தர அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்.

பிணை நிற்போர் கவனத்திற்கு

ஒருவர் ஒரு விண்ணப்பப் படிவத்திற்குமாத்திரம் பிணை நிற்கலாம்.

அவசர அனுமதியில் செல்லும் விண்ணப்பதாரர்திரும்பி வரும்வரை பிணை நிற்பவர் வடபகுதிக்கு வெளியே செல்ல இயலாது.

பிணை நிற்பவர் கண்டிப்பாக 25 வயதிற்கு மேற்பட்டவராகவும் விண்ணப்பதாரரின் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 03 வருடங்களுக்கு மேல் நிரந்தரமாக வசிப்பவருமாக இருத்தல் வேண்டும்.

வடக்கிற்கு வெளியேஇருந்து வருபவர்கள் வெளியே செல்வதற்கான அனுமதி உள்ளே நுழையும் போது அவர்களுக்கு வழங்கப்படும் அனுமதி அட்டையை அவசர அனுமதி வழங்கப்படும் காரியாலயத்தில் காட்டி 100 ரூபா செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து கொடுத்து உள்ளே வரும்போது கொடுக்கப்பட்ட அட்டையின் முன் பக்கத்தில் றபர்ஸ்டாம் குத்தப்பட்டு பின்புறத்தில் அனுமதி வழங்கலுக்கு பொறுப்பானவரின் கையொப்பம் திகதி என்பன குறிப்பிடப்படல் வேண்டும். இது விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்துகொடுத்தஉடன் பெற்றுக் கொள்ளவாம் இவ்வனுமதிச்சீட்டு வழங்கபபட்ட திகதியிலிருந்து ஒரு மாதகாலத்திற்குள் மீளசெல்வதாயின் மட்டுமே பயன்படுத்தலாம். (மண்மீட்பு நிதி சம்பந்தமாக அவசர அனுமதி பெறுபவர்களுக்குரிய நடைமுறை இதிலும் கையாளப்படும்.

விதிவிலக்கு: வெளிமாவட்டங்களில் தொழில் புரிவதை உறுதிப்படுத்தின் இலவச விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். இவர்கள் தங்களை உறுதிப்படுத்தும் விதத்தில் அலுவலக அடையாள அட்டையின் போட்டோ பிரதி அல்லது மேலதிகாரியின் உறுதிப்படுத்தலுக்குரிய கடிதம் சமர்ப்பிக்கபபடல் வேண்டும். இவை இரண்டும் இல்லாத பட்சத்தில் சிபார்சிற்கென பிரிவுப் பொறுப்பாளரினால் நியமிக்கப்பட்ட பொறுப்பாளரின் சிபார்சு சமர்ப்பித்தால் மாத்திரமே இது சாத்தியமாகும்

முக்கிய குறிப்பு: மாவீரர் குடும்பம் போராளிகள் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எமது பிரிவுப் பொறுப்பாளரினால் சிபார்சுக்கென நியமிக்கப்பட்ட முக்கிய பொறுப்பாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை கொடுத்து அவசர அனுமதி வழங்கும் காரியாலங்களில் விண்ணப்பப் படிவம் அவசர அனுமதி வடபகுதிக்குள் நுழைவோர்க்கான அனுமதி அட்டையை புதுப்பித்தல் போன்றவற்றை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

சிற்றூரவை, கிராமசேவையாளர்சிபார்சுஅவசியமற்றது)

சிற்றூரவையின் சிபார்சு:ஒவ்வோர்விண்ணப்பப்படிவத்துடன்மண்மீட்புநிதி செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டின் போட்டோ பிரதி இணைக்கப்பட வேண்டும். இதனைச் செய்யாதோர் கண்டிப்பாக சிற்றூரவையிடம் மண்மீட்பு நிதி செலுத்தியமைக்கான' அல்லது வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர் என்றசிபார்சை மாத்திரம் சிற்றூரவை சிபார்சு செய்தல் வேண்டும். (மேலதிக குறிப்புக்கள் இருப்பின் தனிப்பட்ட முறையில் எமக்கு அறிவிக்கவும்).

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 11 ,07. 91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.